30



# மாயவலை



**பா.ராகவன்**

ஆடத் தெரிந்தவர்களுக்குக் கூடம் எப்படி இருந்தாலும் பிரச்னையில்லை. அதுவும் ஆப்கனிஸ்தான் விஷயத்தில் ஒசாமாவுக்கு ஒரு சிறிய அசௌகரியம்கூட இல்லை என்றுதான் சொல்லவேண்டும். சூடானிலேயே வருஷக்கணக்கில் குப்பை கொட்டிய அமைப்புக்கு, ஆப்கன் ஒருவகையில் தேவலை என்று தோன்றியதில் வியப்பில்லை. அங்கே இருந்த உள்நாட்டுக் குளறுபடிகள், ஏழைமை, பத்திரமில்லாத அடிப்படைவாத ஆட்சி, சந்துக்குச் சந்து டீக்கடைகள் மாதிரி முளைக்கும் புரட்சிகர அமைப்புகள், அமெரிக்காவின், தாலிபன்கள் மீதான கோபம், அவர்கள் வடக்குக் கூட்டணிப் படையினரை வளைக்க மேற்கொண்டிருந்த முயற்சிகள் என்று எதுவுமே அல் காயிதாவுக்குப் பிரமாதமான விஷயங்களாக இல்லை.

வந்து உட்கார்ந்த சூட்டில் என்ன செய்யவேண்டும் என்று முடிவு செய்துகொண்டு, உடனே வேலையைத் தொடங்கிவிட்டார்கள். ஒண்ணுமில்லாத விஷயத்துக்கெல்லாம் எத்தனைபேர் வேலை மெனக்கெட்டு வக்கீல் நோட்டீஸ் அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள்? ஆனால், உண்மையிலேயே சீரியஸாக அமெரிக்காவுக்கு ஒரு நோட்டீஸ் அனுப்பிவிட்டுத்தான் அல் காயிதா வேலையை ஆரம்பித்தது.

அவர்கள் பாஷையில் அதற்கு ஃபத்வா என்று பெயர். எல்லோரும் நினைத்துக்கொண்டிருப்பதுபோல, ஃபத்வா என்றால், மரணதண்டனை என்று அர்த்தமல்ல. ஃபத்வா என்றால் தீர்ப்பு. அவ்வளவுதான். உனக்கு நான் இன்னது செய்ய உத்தேசித்திருக்கிறேன் என்கிற முன்னறிவிப்பு.

'இஸ்லாத்துக்கு எதிரானவர்களின் மீது போர் தொடுப்பது ஒவ்வொரு முஸ்லிமின் கடமை. வளைகுடா பகுதியிலிருந்து அமெரிக்க ராணுவத்தை முற்றிலுமாக விரட்டியடிப்பது அவசியம்.' – இதுதான் அல் காயிதா பிப்ரவரி 23, 1998 அன்று வெளியிட்ட அந்த ஃபத்வாவின் சாரம்.

பிப்ரவரியிலேயே வெளியிடப்பட்டதென்றாலும், இது பொதுமக்கள் பார்வைக்கு வருவதற்கு மே மாதம் ஆகிவிட்டது. மே மாதம் 7-ம் தேதி, அல் காயிதாவின் அப்போதைய தளபதியாக இருந்த முகம்மது அடீஃப் (ஆப்கன் யுத்தத்தில் இவர் அமெரிக்கப் படையினரால் கொல்லப்பட்டுவிட்டார்.) லண்டனிலுள்ள அல் காயிதா அலுவலகத்துக்கு இதனை ஃபேக்ஸ் செய்தார். லண்டனிலிருந்து வெளியாகும் அரபு செய்தித்தாளான அல் கத்ஸ் அல் அரபி (Al quds al Arabi) அந்த ஃபத்வாவை அப்படியே பிரசுரித்தது.

மிகப்பெரிய கார்ப்பரேட்டுகள் ஒரு 'ப்ராடக்ட் லாஞ்ச்'சுக்குத் திட்டமிடுவதுபோல, முதலில் ஃபத்வா போய்ச் சேர, பின்னாலேயே ஏபிசி தொலைக்காட்சிக்கு ஒசாமா பின்லேடனின் பேச்சு அடங்கிய வீடியோ டேப் ஒன்று அனுப்பப்பட்டது. இந்த ஃபத்வா வரிகளை மீண்டும் அதில் உறுதிப்படுத்திவிட்டு, "ராணுவ வீரர்கள், சிவிலியன்கள் என்று நாங்கள் பார்க்கமாட்டோம். எதிரிகள் எதிரிகள்தான். அமெரிக்க அரசுக்கு வரி செலுத்தும் அத்தனை பேருமே எங்கள் இலக்குதான்"

என்று அதில் அவர் சொல்லியிருந்தார்.

இத்தனை வெளிப்படையாக ஒரு தாக்குதல் திட்டத்தை ஊரைக்கூட்டி அறிவித்துவிட்டுச் செய்யும் முடிப்பதென்பது, அல் காயிதா தவிர வேறு யாராலும் நினைத்துப் பார்க்கக்கூட முடியாத விஷயம். அல் காயிதாவுக்கு நிகரான வலிமை படைத்த இயக்கம் என்று சொல்லப்படுகிற ஹிஸ்புல்லா கூட செய்து விட்டுத்தான் பேசுமே தவிர, இன்னது செய்யப்போகிறேன் என்று கூட்டம் கூட்டி மைக் வைத்து அறிவிக்காது.

அல் காயிதா உத்தேசித்திருந்த திட்டம் என்ன? சுலபம். கிழக்கு ஆப்பிரிக்காவில் இருக்கிற இரண்டு அமெரிக்கத் தூதரகங்களைத் தகர்ப்பது.

இரண்டு வேறு வேறு நாடுகள் (கென்யா, தான்சானியா). ஒரே நாள். ஒரே முகூர்த்தம். ஒரே விதமான தாக்குதல். இரண்டு இடங்களிலுமாகச் சேர்த்து சுமார் ஆயிரம் பேருக்குப் பரலோகப் பிராப்தி சித்திக்குமானால் போதும். அமெரிக்கா மீது தான் தொடங்கியிருக்கும் யுத்தத்துக்கு அது ஒரு சரியான டிரெய்லராக இருக்கும் என்று அல் காயிதா நினைத்தது.

அத்தனை மோசமில்லை என்று திருப்திப்பட்டுவிடமுடியுமா என்ன? 220 பேர் மரணம், சுமார் 4,500 பேர் படுகாயம் என்கிற அதிர்ச்சிகரமான க்ளைமேக்ஸுடன் ஒரு முடிவுக்கு வந்த இந்தத் திட்டத்துக்குப் பிறகுதான், அல் காயிதாவின் இருப்பையும் இயக்கத்தையும் அமெரிக்கா உள்பட அத்தனை தேசங்களுமே மிகுந்த அச்சத்துடன் கவனிக்க ஆரம்பித்தன. அமெரிக்க உளவுத்துறையான எஃப்.பி.ஐ. தன்னுடைய 'most wanted' பட்டியலில் ஒசாமா பின்லேடனின் பெயரைச் சேர்த்து, பலகோடிக்கணக்கில் பரிசுத்தொகை அறிவித்தது.

இதெல்லாம் பெரிய விஷயமே இல்லை. மேற்படி திட்டத்தை அல் காயிதா எப்படிச் சாதித்தது என்று பார்க்கவேண்டும். சுவாரசியமே அதில்தான் இருக்கிறது.

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். அதே ஆப்பிரிக்காவில்தான் முந்தைய வருஷம் வரை இருந்தார்கள். தாக்குப் பிடிக்க முடியாமல்தான் சூடானை விட்டுக் கிளம்பி ஆப்கனிஸ்தானுக்கு வந்து சேர்ந்தார்கள். சூடானில் இருக்கும்போதே செயல்படுத்தியிருக்க முடியாதா?

இத்தனைக்கும் 1996-ம் ஆண்டே இந்தத் தூதரகத் தாக்குதல் திட்டம் வடிவமைக்கப்பட்டு, எப்படிச் செய்யவேண்டும், யார் யார் ஈடுபடவேண்டும், என்னென்ன பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும் என்றெல்லாம் முடிவு செய்துவிட்டார்கள்.

இன்னும் சொல்லப்போனால் இந்தத் தூதரகத் தாக்குதலை உத்தேசித்துத்தான் கென்யாவில் அல் காயிதாவின் கிளை ஒன்றையே திறந்தார்கள். வாதி எல் ஹேஜ் (Wadiel Hage) என்கிற லெபனானில் பிறந்து, குவைத்தில் வளர்ந்த போராளியை அந்தக் கிழக்காப்பிரிக்க செல்லுக்குத் தலைவனாக நியமித்தார்கள். (இதில் ஒரு விசித்திரம் என்னவென்றால், இந்த வாதி பிறப்பால் ஒரு கிறிஸ்துவன். குர்ஆனைப் படித்து, அதனால் கவரப்பட்டு முஸ்லிமானவன்.)

இத்தனை முன்னேற்பாடுகள் செய்தபோதும் ஆப்பிரிக்காவில் இருக்கும்போது ஏன் இந்தத் தாக்குதலை நிகழ்த்தவில்லை?

எந்த அமெரிக்காவினால் ஆப்பிரிக்காவை விட்டுக் கிளம்பவேண்டிவந்ததோ, அதே அமெரிக்காவை அதே ஆப்பிரிக்க மண்ணில் அலறச் செய்யவேண்டும் என்கிற வெறி, அப்போது எழுந்திருக்க சாத்தியமில்லை அல்லவா? அதுதான் விஷயம்.

அந்த வெறிதான், அத்தனை ஆயிரம் மைல்கள் தள்ளிவந்து உட்கார நேர்ந்தபோதும் விடாமல்

ஆப்பிரிக்க இலக்கையே குறிவைக்கச் செய்தது.

இனி திட்டத்தை எப்படிச் செயல்படுத்தினார்கள் என்று பார்க்கலாம்.

முதலில் தனது ஆப்பிரிக்கக் கிளையில் இருக்கும் அத்தனை போராளிகளையும் ஏன் எதற்கு என்று காரணம் சொல்லாமல், ஆப்கனிஸ்தானுக்கு வரவழைத்துப் பயிற்சி அளிக்க ஆரம்பித்தார்கள். எப்போதும் இருக்கும் பயிற்சிதான் என்றாலும், தளபதி முகம்மது அடஃப்பின் நேரடி மேற்பார்வையின்கீழ் சுமார் மூன்றுமாத காலம் நடக்கிறது என்றால், அதில் கொஞ்சம் விசேஷம் சேர்ந்துவிடுகிறதல்லவா?

இன்னொரு பக்கம், காரை ஓட்டிச் சென்று இலக்குகளை மோதி அழிக்கப்போகிற இரண்டு தற்கொலைப் படை வீரர்களைத் தனியே பிரித்து (இவர்களது பெயர்கள் இன்றுவரை வெளியே வரவில்லை.), ஒசாமாவே நேரடியாகப் பயிற்சி அளித்தார். அடிப்படைத் தாக்குதல் பயிற்சிகளில் அவர்களைத் தேர்ச்சியடையச் செய்தபிறகு, 'மேல் படிப்புக்காக' லெபனானுக்கு அனுப்பிவைத்தார்.

லெபனான் என்றால் ஹிஸ்புல்லா. ஹிஸ்புல்லா என்றால் அதிபயங்கரம். தெரியுமில்லையா? கடந்த மாதம் முழுக்க மீடியாவை ஆக்கிரமித்திருந்த அமைப்பு.

ஏற்கெனவே சூடானில் இருந்தபோது, ஹிஸ்புல்லாவுடன் அல் காயிதா ஒரு பிசினஸ் ஒப்பந்தம் போட்டிருந்தது. அதன்படி, அல் காயிதாவின் இத்தகைய சிறப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு ஹிஸ்புல்லா பயிற்சியளிக்கும். பதிலுக்கு ஹிஸ்புல்லாவின் ஆயுதத் தேவைகளுக்கு அல் காயிதா பெருமளவு உதவும்.

தற்கொலைப் போராளிகளைத் தயார் செய்வதில், ஹிஸ்புல்லா, எண்பதுகளின் தொடக்கம் முதல் இன்றுவரை நம்பர் ஒன்னாக இருந்துவரும் ஓர் இயக்கம். அதன் ஜிஹாத் பிரிவின் தலைவரான இமத் ஃபயாஸ் மக்னியா, இந்த விஷயத்தில் ஒரு பி.எச்.டி. அளவுக்குத் தேர்ந்தவர். அல் காயிதா, ஹமாஸ் உள்பட எத்தனையோ பல இயக்கங்களின் தற்கொலைத் தாக்குதல்களின் வெற்றிக்குப் பின்னால், இவருடைய மூளைச் சலவை வகுப்புகள் பெரும்பங்காற்றியிருக்கின்றன. (இவரைப் பற்றிப் பின்னால் விரிவாகப் பார்க்கப் போகிறோம்.)

தூதரகத் தாக்குதலுக்காக, அல் காயிதா தேர்ந்தெடுத்த இரண்டு தற்கொலைப் படைப் போராளிகளுக்கும் சிறப்புப் பயிற்சி அளித்தவர் இந்த மக்னியாதான். மன முனைப்பு, உற்சாகம் இழக்காதிருத்தல், பயம் வராமல் இருப்பது, நடுக்கம் எட்டிப்பார்க்காமல் வேலையை முடிப்பது, புத்தியில் அந்த ஒரு தாக்குதல் தவிர, வேறு எதுவுமே இல்லாதுபோதல், பதற்றம் என்பதே அடியோடு இல்லாமல் இருப்பது என்று, ஒவ்வொரு கட்டமாக இந்தப் பயிற்சிகள் இருக்கும். ஒரு மனிதனைக் கிட்டத்தட்ட ரோபாட் மாதிரி மாற்றுகிற விஷயம். குறிப்பாக, குடும்பம், எதிர்காலம் குறித்த சிந்தனையை எல்லாம் அடியோடு அழித்துவிடவேண்டியது முக்கியம்.

இதைப் பேசிப்பேசித்தான் செய்யமுடியும். என்ன பேசுகிறோம் என்பதைக் காட்டிலும் எப்படிப் பேசுகிறோம் என்பதில்தான் வெற்றி இருக்கிறது. ஓர் அணுகுண்டுத் தாக்குதலுக்குத் திட்டமிடுவதைக் காட்டிலும் ஒரு தற்கொலைப் போராளியைத் தயார் செய்வது மிகப்பெரிய காரியம்.

அப்படி முதலில் இரண்டு போராளிகளை லெபனானுக்கு அனுப்பி உருவாக்கிக்கொண்டது அல் காயிதா. பிறகு, முஹம்மது ஓதே (Mohammad Odeh) என்கிற வெடிகுண்டு நிபுணர் மூலம், தேவையான வெடி மருந்துகளைத் தயாரித்து, கென்யாவுக்கும் தான்சானியாவுக்கும் அனுப்பிவைத்தார்கள்.

தான்சானியாவின் தலைநகரான தர் எ சலேமில் கல்ஃபான் காமிஸ் முஹம்மது (Khalfan

Khamis Mohammed) என்றொரு அடிப்படைவாத முஸ்லிமைப் பிடித்து, திட்டத்துக்கு உதவக்கூடிய உள்ளூர்க் கையாக ஏற்பாடு செய்துகொண்டார்கள். போராளிகள் தங்குவதற்கு, வெடிபொருள்களைப் பதுக்கிவைக்க, அவர்களுக்கு வாகன வசதிகள் செய்துதர பிராந்தியத்தில் ஓரளவு செல்வாக்குள்ள பெரிய மனுஷனின் ஒத்தாசை அவசியம் என்று நினைத்தார்கள்போலும்! மேற்படி காமிஸ் முகம்மது அந்தப் பணியை மனமுவந்து ஏற்றுக்கொண்டார். (இதேமாதிரி நைரோபியிலும் ஓர் உள்ளூர்க்காரத் தொடர்பு இருந்திருக்க வேண்டும். ஆனால், விவரம் இதுவரை தெரியவில்லை.)

இதெல்லாம் பிரமாதமில்லை. கென்யாவிலும் தான்சானியாவிலும் செயல்படுத்தப்படவிருந்த தாக்குதல் திட்டம் குறித்து, ஆப்கனிஸ்தானில் வசித்துக்கொண்டிருந்த ஒசாமா பின்லேடனுக்கு அவ்வப்போது அப்டேட் செய்யவேண்டுமே? அது முக்கியமல்லவா? ஒரு போன் செய்து, ‘இந்தமாதிரி தலைவா.. குண்டு ரெடி, ஆள் ரெடி, நாளைக்கு காலைல மேட்டர முடிச்சிரலாமா?’ என்றா கேட்கமுடியும்?

அல் காயிதாவின் தொலைபேசித் தொடர்புகள், இண்டர்நெட் தொடர்புகள் அனைத்தும் வழிமறிக்கப்பட்டுக்கொண்டிருந்த நேரம் அது. ஒசாமா அதுவரை உபயோகித்துக்கொண்டிருந்த சாட்டிலைட் போனைக்கூட, எடுத்துக் கோணிப்பையில் போட்டுக் கட்டி பரண்மேல் வைத்துவிட்டிருந்தார்.

தவிரவும், திட்டம் வெற்றியடையும் வரை, ஆப்பிரிக்காவிலிருந்து அவருக்கு எந்த ஒரு தொலைபேசி அழைப்பு, ஈமெயிலும் வரக்கூடாது என்று கண்டிப்பாக உத்தரவிடப்பட்டிருந்தது.

என்றால், எப்படித் தொடர்பு கொள்வது?

பரபரவென்று யோசித்தார்கள். உலகமெங்கும் இருக்கும் அல் காயிதாவுக்கு நெருக்கமான அத்தனை தீவிரவாத முஸ்லிம் இயக்கத் தலைவர்களுடனும் ரகசியமாக விஷயம் விவாதிக்கப்பட்டது.

யார் கொடுத்த ஐடியா என்று சரியாகத் தெரியவில்லை. இறுதியில், ஆப்பிரிக்கக் கண்டத்துக்கும் ஆசியக் கண்டத்துக்கும் நடுவே ஒரு முக்கோணம் போட்டுக் காரியத்தை முடிக்கலாம் என்று முடிவு செய்தார்கள்.

நம்பமுடியாத, மிகத் திறமையான ஏற்பாடு அது!